OS 139/2021

வா.சா. 1 செல்வராஜ் த/பெ பார்த்தசாரதி

நாள் 04.12.2024

குறுக்கு விசாரணை

1. நான் SSLC படித்துள்ளேன். என் மனைவி பெயர் மஞ்சுளா என்றால் சரிதான். ராஜ்குமார் என்பவர் என் வளர்ப்பு மகன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஸ்ரீ ராதா சில்க்ஸ் என்ற கடையின் விசிடிங் கார்ட் என்னுடையது என்றால் சரிதான். அந்த விசிடிங் கார்ட் **பி.வா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. என்னிடம் காட்டப்படும் ஸ்ரீ ராதா சில்க்ஸ் என்ற கடையின் ரசீது என் கடையின் உடையது என்றால் சரிதான். அதன் உடன் இணைக்கப்பட்டுள்ள ஸ்ரீ ராதா சில்க்ஸ் என்று குறிப்பிட்டுள்ளது என் கடையின் லட்டர் பேட் என்றால் சரிதான். ஸ்ரீ ராதா சில்க்ஸ்ன் ரசீது 14.10.2020 தேதியிட்ட ரசீது மற்றும் லட்டர் பேட் நகல் **பி.சா.வா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. ஸ்ரீ ராதா சில்க்ஸ் எந்த வருடம் தொடங்கப்பட்டது என்றால் 2020 ம் ஆண்டு கொரோனா காலகட்டத்தில் தொடங்கப்பட்டது. 2020 ல் கடை தொடங்கப்பட்ட நாளில் இருந்து இன்று வரை தவறாமல் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் செலுத்தி வருகிறேன். வருமான வரி என் பெயரிலும் என் மனைவி மன்சுளா பெயரிலும் செலுத்தி வருகிறேன்.

4. உமாபதி என்பவர் என் ஆடிட்டர் என்றால் சரிதான். ஸ்ரீ ராதா சில்க்ஸ்ல் எந்த வருடத்தில் இருந்து நானும் பிரதிவாதியும் பங்குதாரராக உள்ளோம் என்றால் அந்த கடை பங்கு தாரர் அடிப்படையில் நடத்தப்படும் கடை அல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 2 ரசீதில் குறிப்பிடப்பட்டுள்ள 3வதாக உள்ள செல் நம்பர் பிரதிவாதி பெருமாளின் செல் நம்பர் என்றால் சரிதான். பிரதிவாதி பங்குதாரர் இல்லை என்று நான் சொல்லியுள்ளதால் எந்த அடிப்படையில் பிரதிவாதியின் செல் நம்பரை ஸ்ரீ ராதா சில்க்ஸ்ன் ரசீது குறிப்பிட்டுள்ளேன் என்றால் அவர் என் நண்பர் என்பதால் நட்பு ரீதியாக செல் நம்பர் குறிப்பிடப்பட்டுள்ளது.

5. நான் தாக்கல் செய்துள்ள தாவாவில் 4ம் பத்தியில் பிரதிவாதி என் கடையின் வொர்க்கிங் பாட்னர் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் பிரதிவாதியை வொர்க்கிங் பார்ட்னர் என்று எந்த இடத்திலும் குறிப்பிட்டுள்ள சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 2 ல் பிரதிவாதியிடம் அந்த ரசீதில் குறிப்பிடப்பட்டுள்ள புடவைகளை பெற்றுக்கொண்டு 14.10.2020 தேதியில் ராஜ்குமார் என்பவர் அந்த ரசீதில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை பிரதிவாதி பெருமாளிடம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

7. இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 17/2015 என்ற வழக்கினை நீலமேகம் என்பவரின் மீது தாக்கல் செய்து அந்த வழக்கு சொத்தினை நான் ஏலத்தில் எடுத்தேன் என்றால் சரிதான். அதேபோல் இந்த வருடம் அசல் வழக்கு எண். 132/2024 என்ற வழக்கினை ஜெகதீசன் என்பவர் மீது கடன் உறுதி சீட்டின் பேரில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதே போல் ஈஸ்வரி என்பவர் மீது இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 25/2024 என்ற வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் தியாகராஜன் என்பவர் மீது இதே நீதிமன்றத்தில் காசோலை முன்னிலைக்கு அசல் வழக்கு எண். 28/2024 என்ற வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதே போல் கோபால் என்பவர் மீது இதே நீதிமன்றத்தில் காசோலை முன்னிலைக்கு அசல் வழக்கு எண். 29/2024 என்ற

வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதே போல் பாஸ்கர் என்பவர் மீது இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 235/2020 என்ற வழக்கினை தாக்கல் செய்து அந்த வழக்கில் பாஸ்கருடன் நான் செடில்மென்ட் செய்துவிட்டேன் என்றால் சரிதான்.

8. நான் நடத்தி வரும் ஸ்ரீ ராதா சில்க்ஸ்ல் வரவு செலவு கணக்கு குறித்த பதிவேடு பராமரித்து வருகிறேனா என்றால் பராமரித்து வருகிறேன். ஆனால் இந்த வழக்கு கடனுக்கு கணக்கு பதிவேட்டில் எழுதப்படவில்லை. வரவு செலவு குறித்த வருமான வரி கணக்கினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் 2015ம் ஆண்டில் பிரதிவாதிக்கு 5 கடனுறுதி சீட்டின் பேரில் தலா ரூ.1,50,000/- ஆக மொத்தம் ரூ.7,50,000/- கடன் கொடுத்ததாக சொல்வது குறித்த கணக்கினை வருமான வரி கணக்கில் குறிப்பிட்டு சொல்லியிருந்தால் என்னுடைய வருமான வரி கணக்கினை இந்த வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றும் அவ்வாறு தாக்கல் செய்யாதது காரணம் அந்த வருமான வரி கணக்கில் தாவா கடன் பத்தி சொல்லவில்லை என்பது தான் என்றால் சரியல்ல.

9. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ1 கடனுறுதி சீட்டில் தங்களிடத்தில் ஏற்கனவே மொத்தமாக பெற்ற தொகைக்காக பெற்ற பழைய பாண்ட்டுக்களை வாப்பஸ் பெற்றுக்கொண்டு அதற்கு பதிலாக புதிய பாண்டு எழுதி கொடுப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றும் ஆனால் எந்த தேதியிட்ட பழைய பாண்டுகள் என்று தேதி குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் பழைய பாண்டுகளுக்கான தொகை எவ்வளவு என்று குறிப்பிட்டு வா.சா.ஆ 1ல் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

10. நான் 2015ம் ஆண்டில் பிரதிவாதிக்கு 5 கடனுறுதி சீட்டின் பேரில் தலா ரூ.1,50,000/- ஆக மொத்தம் ரூ.7,50,000/- கடன் கொடுத்ததாக சொல்வது குறித்த ஆவணம் ஏதும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 28.06.2018 தேதிக்கு பிறகு பிரதிவாதி என்னிடம் கடனுறுதி சீட்டு அல்லது காசோலை கொடுத்தாரா என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும் 23.10.2018 தேதியில் ரூ.50,000/- க்கான காசோலை ஒன்று பிரதிவாதி என்னிடம் கொடுத்துள்ளார் என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 2 ஆவணத்தின் மூன்றாவது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரவு செலவு கணக்கினை எழுதியது என் மனைவி மஞ்சுளா என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 2 ல் உள்ள மூன்றாவது பக்கத்தில் உள்ள வரவு செலவு கணக்கு மட்டும் **பி.வா.சா.ஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. வா.சா.ஆ 1 கடனுறுதி சீட்டில் சாட்சி கையெழுத்து போட்டுள்ள சங்கர் என் கடையில் 7 வருடங்களாகவும் மற்றொரு சாட்சி கையெழுத்து போட்டுள்ள தனசேகரன் என் கடையில் 4 வருடங்களாவும் வேலை செய்து வருகிறார்கள். வா.சா.ஆ 1 கடனுறுதி சீட்டை எழுதிய பத்ராசலம் என்பவர் என் நண்பர் ஆவார். அவர் எனக்கு 10 முதல் 12 வருடங்களாக நண்பராக உள்ளார்.

12. என்னிடம் காட்டப்படும் அசல் வழக்கு எண். 235/2020 என்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 20.08.2017 தேதியிட்ட ரூ.1,50,000/- க்கான 5 கடனுறுதி சீட்டுக்களின் சான்றிட்ட நகல்களின் உள்ள சாட்சி கையெழுத்துக்கள் அனைத்தும் சங்கர் என்பவர் உடையது மற்றும் அந்த 5 கடனுறுதி சீட்டுக்களை எழுதியது பத்ராசலம் என்றால் சரிதான். அசல் வழக்கு எண். 235/2020 என்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 20.08.2017 தேதியிட்ட ரூ.1,50,000/- க்கான 5 கடனுறுதி சீட்டுக்களின் சான்றிட்ட நகல்களில் உள்ள சங்கர் என்பவரின் சாட்சி கையெழுத்துக்கள் 5 **பி.வா.சா.ஆ 4 முதல் பி.வா.சா.ஆ 8** வரையாக குறியீடு செய்யப்படுகிறது. 20.08.2017 தேதியிட்ட ரூ.1,50,000/- க்கான 5 கடனுறுதி சீட்டுக்களின்

சான்றிட்ட நகல்களில் உள்ள பத்ராசலம் என்பவரின் கையெழுத்துக்கள் 5 **பி.வா.சா.ஆ 9 முதல் பி.வா.சா.ஆ 13** வரையாக குறியீடு செய்யப்படுகிறது.

13. 20.08.2017 தேதியிட்ட ரூ.1,50,000/- க்கான 5 கடனுறுதி சீட்டுக்களின் சான்றிட்ட நகல்களில் உள்ள பரமேஸ்வரி என்று சாட்சி கையெழுத்து போட்டுள்ளவர் வா.சா.ஆ1 கடனுறுதி சீட்டை சாட்சி கையெழுத்து போட்டுள்ள தனசேகரன் என்பவரின் மனைவி என்றால் சரிதான். 20.08.2017 தேதியிட்ட ரூ.1,50,000/- க்கான 5 கடனுறுதி சீட்டுக்களின் சான்றிட்ட நகல்களில் உள்ள பரமேஸ்வரி என்று சாட்சி கையெழுத்துக்கள் 5 **பி.வா.சா.ஆ 14 முதல் பி.வா.சா.ஆ 18** வரையாக குறியீடு செய்யப்படுகிறது.

14. என்னிடம் காட்டப்படும் அசல் வழக்கு எண். 132/2024 தாக்கல் செய்யப்பட்ட 10.07.2022 தேதியிட்ட ரூ.6,00,000/-க்கான கடனுறுதி சீட்டின் சான்றிட்ட நகலில் உள்ள 2 சாட்சி கையெழுத்துகளும் சங்கா் மற்றும் தனசேகரன் கையெழுத்துக்கள் என்றால் சரிதான். 10.07.2022 தேதியிட்ட ரூ.6,00,000/- க்கான கடனுறுதி சீட்டின் சான்றிட்ட நகல் 5 **பி.வா.சா.ஆ19** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

15. என்னிடம் காட்டப்படும் அசல் வழக்கு எண். 25/2024 தாக்கல் செய்யப்பட்ட 24.11.2022 தேதியிட்ட ரூ.1,00,000/-க்கான கடனுறுதி சீட்டின் சான்றிட்ட நகலில் உள்ள 2 சாட்சி கையெழுத்துகளும் சங்கா் மற்றும் தனசேகரன் கையெழுத்துக்கள் என்றால் சரிதான். 24.11.2022 தேதியிட்ட ரூ.1,00,000/- க்கான கடனுறுதி சீட்டின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ20** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

16. வா.சா.ஆ1 கடனுறுதி சீட்டின் தங்களிடம் ரொக்கமாக பெற்ற தொகை ரூ.6,25,000/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அதில் குறிப்பிட்டுள்ளது போல் ரூ.6,25,000/- அன்றைய தேதியில் ரொக்கமாக தான் பிரதிவாதிக்கு கொடுத்தேனா என்றால் ரொக்கமாக தான் கொடுத்தேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞா் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடா்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.